விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆவணி - 14 திங்கள் 30.08.2021 மலர் - 2, இதழ் - 146

# பாரதத்தின் டிஜிட்டல் கரன்சி


விஜயபாரதம்

பாரத ரிசர்வ் வங்கி அதன் டிஜிட்டல் நாணயமான மத்திய வங்கி டிஜிட்டல் கரன்சி (சி. பி.டி.சி) கொள்கையை ஏற்றுக்கொள்வதற்கான ஒரு முயற்சியில் முக்கிய முடிவு எடுத்துள்ளது.

பாரத ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்திகாந்த தாஸ் சி.என்.பி.சி தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில், 'பாரத ரிசர்வ் வங்கி தனது முதல் டிஜிட்டல் நாணய சோதனை திட்டங்களை டிசம்பர் மாதத்திற்குள் தொடங்க வாய்ப்புள்ளது. உலகெங்கிலும் உள்ள மத்திய வங்கிகள், டிஜிட்டல் நாணயங்கள் குறித்து ஆராய்ச்சிகள் மேற்கொண்டுள்ளன. நாங்கள் இது குறித்து மிகவும் கவனமாக இருக்கிறோம். ஏனெனில் ஆர்.பி.ஐக்கு மட்டுமல்ல, உலகற்கே இது முற்றிலும் புதிது.

ரிசர்வ் வங்கி வெளியிடும் டிஜிட்டல் நாணயத்தின் பாதுகாப்பு, அதனால் நிதித்துறை மீது ஏற்படும் தாக்கம், பணவியல் கொள்கை, புழக்கத்தில் உள்ள பணத்தை அது எவ்வாறு பாதிக்கும் என்பது உட்பட பல்வேறு அம்சங்கள் குறித்து ஆய்வு செய்து வருகிறோம். ரிசர்வ் வங்கி டிஜிட்டல் நாணயத்திற்கு மையப்படுத்தப்பட்ட லெட்ஜர் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது அல்லது பெரும்பாலான கிரிப்டோகரன்ஸிகள் பயன்படுத்தும் விநியோகிக்கப்பட்ட லெட்ஜர் தொழில்நுட்பம் (DLT) பயன்படுத்துவது குறித்தும் ஆராய்கிறோம்' என்று அவர் கூறினார்.

முன்னதாக, கடந்த மாதம், ரிசர்வ் வங்கி துணை ஆளுநர் டி. ரபி சங்கர், 'ரிசர்வ் வங்கி, டிஜிட்டல் வடிவத்தில் சட்டப்பூர்வமாக வெளியிடும் நாணயமாக சி.பி.டி.சியை வரையறுக்கிறது. இந்த டிஜிட்டல் நாணயம் ஒரு பியட் நாணயத்தைப் போன்றது. பியட் நாணயம் ஒருவருக்கு ஒருவர் பரிமாறிக்கொள்ளக்கூடியது. அதன் வடிவம் மட்டுமே மாறுபடும்' என தெரிவித்திருந்தார்.

**பியட் நாணயம்:**

பியட் நாணயம் என்பது, அரசு வெளியிடும் நாணயமாகும், அமெரிக்க டாலர் போன்ற அச்சிடப்பட்ட காகித பணம்கூட பியட் நாணய வகைதான். இது தங்கம் போன்ற பொருட்களுடன் இணைக்கப்படாதது. பியட் நாணயம் மத்திய வங்கிகளுக்கு பொருளாதாரத்தின் மீது அதிக கட்டுப்பாட்டை அளிக்கும். பியட் நாணயத்தில் உள்ள ஒரே ஆபத்து அரசாங்கங்கள் அதனை அதிகமாக அச்சடித்தால், அதிக பணவீக்கம் ஏற்படும் என்பதுதான்.

# பண்டிகைகளின் முக்கியத்துவம்



விஜயபாரதம்

மனத்தின் குரல் நிகழ்ச்சியில் உரையாற்றிய மோடி, 'மேஜர் தியான் சந்த் பிறந்த நாள் தேசிய விளையாட்டு தினமாக கொண்டாடப்படுகிறது. டோக்கியோ ஒலிம்பிக் ஹாக்கி போட்டியில் 41 ஆண்டுகள் கழித்து பாரத ஹாக்கி அணி வீரர்கள் திறமையை நிரூபித்து உள்ளனர். ஹாக்கியில் மீண்டும் உயிரூட்டியுள்ளனர். ஒவ்வொருவரின் பங்களிப்பின் மூலம் பாரதம் பல உச்சங்களை அடைய முடியும். இன்றைய இளைஞர்களின் மனங்கள், பழமைவாத வழிமுறைகளை விட்டு விலகி, புதிதாக சாதிக்க விரும்புகின்றன. கிராமங்களில் தொடர்ச்சியாக விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட வேண்டும். நமது விழாக்களின் பின்புலமாக உள்ள அறிவியலை அறிந்து நாம் கொண்டாட வேண்டும். ஒவ்வொரு பண்டிகையின் பின்னாலும் ஒரு முக்கிய செய்தி மறைந்துள்ளது. பண்டிகைகளை அடுத்த தலைமுறையினருக்கு நாம் எடுத்துச் செல்ல வேண்டும். சோமநாத்தில் அருகில் உள்ள பாலகா தீர்த் எனும் இடத்தில்தான் பகவான் கிருஷ்ணர் தன் கடைசி காலத்தை கழித்தார். கழிவுகளையும் செல்வமாக்க முடியும் என்பதற்கு சிவகங்கையில் உள்ள காஞ்சிரங்கால் கிராமம் ஒரு உதாரணம்' என தெரிவித்தார்.

# வீட்டு உரிமையாளர்கள் கவனத்திற்கு




விஜயபாரதம்

பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அரசு மற்றும் காவல்துறை சார்பில் பல்வேறு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக பாதுகாப்பு மற்றும் குற்றத் தடுப்பு நடவடிக்கையாக மத்திய உள்துறை அமைச்சகத்தின் உத்தரவின்பேரில், வீட்டு உரிமையாளர்கள், தங்களது வீட்டில் வாடகைக்கு குடியிருப்போரின் (வாடகை தாரர்களின் பெயர், ஒரு புகைப்படம், அவர்களது நிரந்தர முகவரி, ஏற்கனவே வசித்த முகவரி) போன்ற விவரங்களை இதற்காக உள்ள விண்ணப்ப மனுக்களில் எழுதி, காவல் நிலையங்களில் தெரியப்படுத்த வேண்டும் என்ற உத்தரவு ஏற்கெனவே அமலில் உள்ளது. இந்நிலையில், சென்னையில் உள்ள வீட்டு உரிமையாளர்கள் தங்கள் வீட்டில் வாடகைக்கு வசிப்போரின் விவரங்களை அக்டோபர் 26ம் தேதிக்குள், தாங்கள் வசிக்கும் எல்லைக்குள் உள்ள காவல் நிலையத்தில் தெரிவிக்க வேண்டும் என சென்னை காவல் ஆணையர் சங்கர் ஜிவால் உத்தரவிட்டுள்ளார். வெளிமாநிலங்களிலோ அல்லது வெளிநாடுகளில் இருந்து வாடகைக்கு வருபவர்களும் கண்டிப்பாக பதிவு செய்ய வேண்டியது அவசியம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொரோனா தடுப்பூசி ஒன்று போதும்




விஜயபாரதம்

கொரோனா தொற்று ஏற்பட்டோருக்கு எத்தனை டோஸ் தடுப்பூசி வழங்குவது என்பது குறித்து ஆராய்ச்சிகள் உலகெங்கிலும் நடந்து வருகிறது. இது சம்பந்தமாக இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ஐ.சி.எம்.ஆர்), சென்னையில் நடத்திய ஆய்வின் முடிவில், 'கொரோனாவால் பாதிக்கப்பட்ட பிறகு, ஒரு டோஸ் கோவாக்சின் தடுப்பூசி எடுத்துக் கொண்டவர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வில் அவர்களுக்கு, கொரோனாவால் பாதிக்கப்படாமல் இரண்டு டோஸ் தடுப்பூசி எடுத்துக் கொண்டவர்களுக்குக் கிடைக்கும் அதே அளவு நோய் எதிர்ப்பு சக்தி கிடைத்துள்ளது தெரிய வந்துள்ளது. இந்த முதற்கட்டப் பரிசோதனைகளை இன்னும் அதிகமானோருக்கு செய்ய வேண்டும். அதில் இந்த முடிவுகள் உறுதி செய்யப்பட்டால், எதிர்காலத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோருக்கு ஒரு டோஸ் கோவாக்சின் தடுப்பூசி செலுத்தினாலே போதுமானது' என்று கூறப்பட்டுள்ளது.

# மேட் இன் இந்தியா தலைக்கவசம்




விஜயபாரதம்

பாரதத்திலேயே தயாரிக்கப்பட்ட ஏகே 47 குண்டுகள்கூட துளைக்காத புதிய தலைக்கவசங்கள் நமது இந்திய ராணுவ வீரர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ளன. கான்பூரில் உள்ள எம்.கே.யு லிமிடெட் என்ற நிறுவனத்துடன் 1 லட்சத்து 58 ஆயிரம் தலைக்கவசங்கள் பெற பாதுகாப்பு அமைச்சகம் ஏற்கனவே ஒப்பந்தம் மேற்கொண்டது. இந்த தலைக்கவசங்கள் ராணுவத்தால் பல்வேறு கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டது. இந்திய ராணுவத்தில் 1990கள் முதல் செயல்பாட்டில் உள்ள பட்கா தலைக்கவசத்திற்கு மாற்றாக இந்த புதிய தலைக்கவசம் பயன்படுத்தப்படும். 1.2 கிலோ எடை கொண்ட இந்த தலைக்கவசம் அதிர்வுகளை தாங்கி தலையில் காயம் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. தற்போது முக்கியமான ஆபரேசன் நடைபெறும் இடங்களில் பணிபுரியும் வீரர்களுக்கு இந்த தலைக்கவசங்கள் வழங்கப்பட்டுவிட்டது. கடற்படை வீரர்களும் இந்த தலைக்கவசத்தை தற்போது உபயோகித்து வருகின்றனர். எம்.கே.யு லிமிடெட் சிலி, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், எகிப்து, நேபாளம் ஆகிய நாடுகளுக்கும் தலைக்கவசங்களை ஏற்றுமதி செய்துவருகிறது.


# சூப்பர் ஸ்டார் பங்குச்சந்தை திட்டம்

திருச்சியை சேர்ந்த கிரிஷ் மாத்ருபூதம், ஷான் கிருஷ்ணசாமி சென்னையில் 'ஃபிரஷ் வொர்க்ஸ்' நிறுவனத்தை தொடங்கினர். அந்நிறுவனம் மென்பொருள் சேவையை வழங்கி வருகிறது. வாடிக்கையாளர்கள் பெருமளவில் அமெரிக்காவில் இருந்ததால் 2018ல் அமெரிக்காவின் சிலிகான் வேலிக்கு இடம் மாறியது. அங்கு சென்ற மூன்று ஆண்டுகளில் அமெரிக்க பங்குச்சந்தையில் பங்குகள் விற்பனை மூலம் 100 மில்லியன் அமெரிக்க டாலர்கள் நிதி திரட்ட முடிவு செய்துள்ளது. இத்திட்டத்திற்கு அந்நிறுவனம் 'சூப்பர் ஸ்டார்' என்று பெயர் வைத்துள்ளது. தன்னுடைய மானசீக குரு ரஜினிக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவுன் அன்பை வெளிப்படுத்தும் விதமாகவும் இப்பெயரை வைத்ததாக கிரிஷ் மாத்ருபூதம் தெரிவித்துள்ளார். 'ஃபிரஷ் வொர்க்ஸ்' நிறுவனத்திற்கு உலகம் முழுவதும் 52 ஆயிரத்திற்கும் அதிகமான வாடிக்கையாளர்கள் உள்ளனர். இந்நிறுவனம் அமெரிக்காவில் இயங்கினாலும் இதன் பெரும்பாலான ஊழியர்கள் சென்னையில்தான் உள்ளனர்.




விஜயபாரதம்

# தங்க பத்திரம் வெளியீடு




விஜயபாரதம்

நடப்பு நிதியாண்டுக்கான மத்திய அரசின் ஆறாம் கட்ட தங்க பத்திர வெளியீடு இன்று துவங்குகிறது. இதில் 999 சுத்தமான தங்கத்தை ஆவண வடிவில் சேமிக்கலாம். தங்கத்தின் விலை ஒரு கிராமுக்கு, 4,732 ரூபாய் என, நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வலைதளம், மின்னணு முறைகளில் மேற்கொள்ளும் முதலீடுகளுக்கு, 1 கிராமுக்கு ரூ. 50 தள்ளுபடி வழங்கப்படும். இன்று துவங்கி, செப்டம்பர் 3ம் தேதியுடன் முடிவடைகிறது. தனிநபர்கள் அதிகபட்சமாக 4 கிலோ வரை முதலீடு செய்யலாம். அறக்கட்டளைகள் 20 கிலோ வரை முதலீடு செய்ய முடியும் என மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

# சட்ட விரோதமாக தங்கியவர் கைது

சூடான் நாட்டைச் சேர்ந்தவர் முகமது ஹலூம் என்பவர், இரண்டு ஆண்டுகளுக்கு முன், சுற்றுலா விசாவில் பாரதம் வந்தார். விசா முடிந்தும் அவர் நாடு திரும்பாமல் தமிழகத்தில், கோவை, திருப்பூர் மாவட்டங்களில் தங்கி, பின்னலாடை தொழிற்சாலைகளில் வேலை செய்து வந்துள்ளார். அவரை திருப்பூர் அருகே கண்டுபிடித்த குடியுரிமை அதிகாரிகளும் காவல்துறையினரும் திருச்சியில் உள்ள ஒரு சிறப்பு முகாமில் அவரைத் தங்க வைத்தனர். பின்னர் சென்னையில் இருந்து தோகா செல்லும் கத்தார் ஏர்லைன்ஸ் விமானத்தில், தோகா வழியாக சூடான் நாட்டிற்கு திருப்பி அனுப்பிவைத்தனர்.



விஜயபாரதம்

# வழிகாட்டும் பிரியா முண்டா



விஜயபாரதம்

கிறிஸ்தவ மிஷனரிகள், அப்பாவி ஹிந்துக்களிடம் பணம், கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவம் போன்ற ஆசைகளை காட்டியும் பயமுறுத்தியும் மதமாற்றம் செய்து வருகின்றனர். இவர்களிடம் அதிகமாக சிக்குவது அப்பாவி பழங்குடியின, பட்டியலின மக்கள்தான். ஆனால், மதம் மாறிய பிறகு அவர்களுக்கு அளிக்கப்படுவதாகக் கூறப்படும் உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்பதுதான் எதார்த்தம்.

இந்நிலையில், ஜார்கண்ட் மாநிலத்தில் பாரி கிராமத்தில் உள்ள ஒரு பழங்குடியின கிராம மக்கள் அனைவரையும் மூளைசலவை செய்து கிறிஸ்தவ மதத்திற்கு மிஷனரிகள் மதம் மாற்றி உள்ளனர். இது போன்ற கிறிஸ்தவ மிஷனரிகளுக்கு எதிராக பல ஆண்டு காலமாக போராடி வரும் பிரியா முண்டா என்ற பெண் இவர்களை தாய் மதத்திற்குத் திருப்பும் முயற்சியில் ஈடுபட்டார். அந்த கிராமத்தில் உள்ள பாதிரி, அங்குள்ள மக்களை கட்டாய மதமாற்றம் செய்வதை முதலில் தடுத்துள்ளார்.

இதனையடுத்து பாரி கிராமத்தில் உள்ள பழங்குடியினரை சந்தித்து பேசி விழிப்புணர்வை ஏற்படுத்தினார் பிரியா முண்டா. அவர்களிடம் தாய்மதம் திரும்புவதற்கான கட்டாயத்தை எடுத்துரைத்தார். உண்மையை உணர்ந்த அக்கிராமத்தினர் கிறிஸ்தவ மதத்திலிருந்து தாய் மதத்துக்கு திரும்புவதற்கு முடிவெடுத்துள்ளனர்.

போதிய விழிப்புணர்வு இல்லாத பழங்குடியின மக்களை மதம் மாற்றி அவர்களிடம் மத்திய அரசு குறித்து தவறாக பொய் பிரச்சாரங்களை மேற்கொண்டு ஒட்டுமொத்த கிராமத்தையே கிறிஸ்தவ மிஷனரிகள் மதமாற்றம் செய்துள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. கிறிஸ்தவ மிஷனரியின் சதியை முறியடித்து பழங்குடியினரிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்கள் தாய்மதத்திற்கு திரும்புவதற்கு உதவியாய் இருந்த பிரியா முண்டாவிற்கு பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

# விமானப்படைக்கு ஏ.கே. 103



விஜயபாரதம்

நமது பாரத விமானப்படையிடம் தற்போது உள்ள இன்சாஸ் துப்பாக்கிகளுக்கு மாற்றாக ரஷ்யாவிடம் இருந்து 70 ஆயிரம் ஏ.கே 103 ரக துப்பாக்கிகள் வாங்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விமானப்படைக்கு தற்போது ஒரு லட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் அதிகமான நவீன துப்பாக்கிகள் தேவை எனும் நிலையில் முதல்கட்டமாக தற்போது அவசர கொள்முதலாக 70 ஆயிரம் துப்பாக்கிகள் பெறப்பட உள்ளன. காஷ்மீரில் பயங்கரவாத எதிர்ப்பு பணி, முக்கியமான விமானப்படை தளங்களில் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள வீரர்கள், கருடா கமாண்டோக்களுக்கு இந்த புதிய துப்பாக்கிகள் வழங்கப்பட உள்ளன.

# பிரஸ் கவுன்சில் நியமனம்




விஜயபாரதம்

போலி பத்திரிகையாளர்களை களையெடுக்க, அங்கீகார அட்டை வழங்க, சங்கங்களுக்கு தேர்தல் நடத்த, ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற அல்லது உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில், 'பிரஸ் கவுன்சில்' அமைக்க வேண்டும் என கூறிய சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள், 'பத்திரிகையாளர் எனக்கூறி, அரசு அதிகாரிகள், தொழில் அதிபர்களை பலர் மிரட்டுவதும், குற்றச் செயல்களில் ஈடுபடுவதும் நடக்கிறது. பிரபல பத்திரிகைகளில் பணிபுரிவதாக கூறிக்கொண்டு போலி நிருபர்கள் பலர் செயல்படுகின்றனர். பத்திரிகையாளர்கள் சங்கங்களில், போலி நிருபர்களின் ஆதிக்கம் அதிகம். உண்மையான நிருபர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். இவர்களால் பத்திரிகைகளின் மதிப்பு குறைகிறது. இதை சுத்தம் செய்ய வேண்டும்' என தெரிவித்தனர். மேலும், பிரஸ் கவுன்சிலை, மூன்று மாதங்களில் தமிழக அரசு நியமிக்க வேண்டும் என கூறி பிரஸ் கவுன்சிலின் அதிகாரங்கள், உரிமைகளையும், வழிகாட்டு நடைமுறைகளையும் தங்கள் உத்தரவில் தெளிவாக்கியுள்ளனர்.

# மமதாவுக்கு நெருக்கடி



விஜயபாரதம்

திருணாமுல் கட்சித்தலைவரும் மேற்கு வங்க முதல்வருமான மமதா பானர்ஜியின் மருமகன் அபிஷேக் பானர்ஜியும் அவரது மனைவியும் மேற்கு வங்க மாநிலத்தில் ஈஸ்டர்ன் கோல்பீல்ட்ஸ் சுரங்கங்கள், அசன்சோல் நிலக்கரி சுரங்கங்கள் விவகாரத்தில் நடத்திய 1,352 கோடி ரூபாய்க்கும் அதிகமான பணமோசடி, சட்டவிரோத நிதி பரிமாற்றம் சம்பந்தமாக சி.பி.ஐ கடந்த நவம்பர் 2020ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது. அதன் அடிப்படையில் வரும் செப்டம்பர் 6 ஆம் தேதி வழக்கின் விசாரணை அதிகாரி முன் ஆஜராகுமாறு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியுள்ளது. அபிஷேக் பானர்ஜி, மேற்கு வங்கத்தின் டயமண்ட் ஹார்பர் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் உள்ளார்.

# மாலத்தீவுக்கு பாரதம் உதவி



விஜயபாரதம்

மாலத்தீவுகளில் அதன் தலைநகர் மாலேயை அண்டை தீவுகளான வில்லிங்லி, குல்ஹிஃபல்ஹு, திலஃபுஷி ஆகியவற்றுடன் இணைக்கும் 6.74 கிமீ நீள பாலம் கட்டப்பட உள்ளது. ‘கிரேட் மேல் கனெக்டிவிட்டி புராஜக்ட்’ என பெயரிடப்பட்ட இந்த திட்டத்திற்கு பாரதம் உதவி செய்கிறது. பல ஆண்டுகளுக்குப் பிறகு அந்த நாடு செயல்படுத்தும் பெரிய திட்டமான இதற்கு 100 மில்லியன் அமெரிக்க டாலர் மானியம் மற்றும் மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான கடனை பாரதம் வழங்குகிறது.

# துர்கா பைட்டர் படை


விஜயபாரதம்

சத்தீஸ்கரின் நக்சல்களால் பாதிக்கப்பட்ட சுக்மா மாவட்டத்தில் நக்சல்களின் அட்டூழியங்களை எதிர்த்து போராட, சத்தீஸ்கர் காவல்துறை 32 பெண் காவலர்களைக் கொண்ட 'துர்கா பைட்டர்' என்ற அதிரடிப் படையை உருவாக்கியுள்ளது. அவர்களுக்கு ஒரு மாதம் தீவிர கமாண்டோ பயிற்சி அளிக்கப்படும். அவர்கள் ஆண்களை போலவே அனைத்து கடமைகளையும் செய்வார்கள். பாலின சமத்துவத்தை ஊக்குவிப்பதே இந்த பெண்கள் சக்தியின் பின்னணியில் உள்ள யோசனை என்று சுக்மா காவல்துறை கண்காணிப்பாளர் சுனில் ஷர்ம தெரிவித்தார். துர்கா பைட்டர்ஸ் படையின் கேப்டன் ஆஷா சென், 'சுக்மா பகுதியை நக்சல் இல்லாத பகுதியாக ஆக்குவோம். ரக்ஷா பந்தன் அன்று சகோதர சகோதரிகள் ஒருவருக்கொருவர் பாதுகாப்பாக இருப்பதாக உறுதியளிப்பது போல, நாங்கள் சுக்மா பிராந்திய மக்களை நக்சலைட்டுகளிடமிருந்து பாதுகாப்பதாக உறுதியளித்துள்ளோம். இக்குழுவில் எங்களுக்கு இடம் கொடுக்கப்பட்டுள்ளதால் நாங்கள் இப்போது ஆண்களுக்கு சமமாக உணர்கிறோம்' என கூறினார்.

# பாதிரி சர்ச்சை பேச்சு



விஜயபாரதம்

ஆந்திர மாநிலத்தை சேர்ந்த எஸ்.சி, எஸ்.டி உரிமைகள் பாதுகாப்பு என்ற அமைப்பு ஒன்று வீடியோ பதிவு ஒன்றை டுவிட்டரில் பதிவிட்டுள்ளது. அந்த வீடியோ பதிவில், பைபிள் ஓபன் யுனிவர்சிட்டி இன்டர்நேஷனல் (BOUI) அமைப்பின் துணை இயக்குநரும் மத போதகருமான உபேந்திரா 'எங்களது தலைவர் சந்தர்ராவின் வழிகாட்டுதளின்படி செயல்படும் நாங்கள், அனைத்திந்திய உண்மை கிறிஸ்தவர்கள் கூட்டமைப்பின் சார்பாக பாரதத்தை இரண்டாக கூறு போட்டு அதில் ஒரு பாதியை கிறிஸ்தவர்களுக்கு என தனி நாடாக கொடுத்து விடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களைத் தொந்தரவு செய்ய மாட்டோம்' என்று பேசியுள்ளார். ஏற்கனவே விஜயகுமார் என்ற மத போதகரும் இதே போன்று பேசியது குறிப்பிடத்தக்கது. பாரத மாதாவுக்கு பல கணவர்கள் இருக்கிறார்களா என்று கீழ்த்தரமாக பேசியதற்காக கைது செய்யப்பட்ட அவர், பெயிலில் வெளியே வந்து ஹிந்துக்கள் அனைவரும் நரகத்துக்கு செல்வார்கள் என்று சபித்ததோடு, பாரதத்தை இரண்டாகப் பிரித்து அதில் ஒரு பாதியை கிறிஸ்தவர்களுக்கு தனிநாடாக வழங்கிவிட வேண்டுமென்று பேசியது குறிப்பிடத்தக்கது. இவர்களை போன்றவர்களை தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்து கடுமையாக தண்டிக்க வேண்டும் என மக்கள் அரசிடம் கோரிக்கை வைத்துள்ளனர்.

# லடாக்கில் இனி பர்மிட் தேவையில்லை

காஷ்மீரில் சர்ச்சைக்குரிய சட்டப்பிரிவு 370 நீக்கத்திற்குப் பிறகு அப்பகுதியின் முன்னேற்றம் வேறு எப்பொழுதும் இல்லாத அளவிற்கு வேகமெடுத்துள்ளது. லடாக்கை உலக மக்களுக்கு ஒரு விருப்பமான சுற்றுலா தலமாக ஊக்குவிக்க, மத்திய சுற்றுலா அமைச்சகம் ஏற்பாடு செய்திருந்த மூன்று நாள் நிகழ்ச்சியில், 'லடாக் யூனியன் பிரதேசத்தில் சுற்றுலாத் துறைக்கு ஊக்கமளிக்கும் விதத்தில், லடாக்கின் பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்ல வழங்கப்பட்ட 'இன்னர் லைன் பெர்மிட்'டை லடாக் நிர்வாகம் பாரதத்தை சேர்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கு தற்போது முற்றிலுமாக நீக்கியுள்ளது. விரைவில் இது வெளிநாட்டுப் பயணிகளுக்கும் நீக்கப்படும். அதுவரை அவர்கள் பெறும் பர்மிட் செல்லுபடியாகும் காலம் 7ல் இருந்து 15 நாட்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. பிரச்சனைக்குரிய எல்லைப் பகுதிகளைத் தவிர மற்ற லடாக் எல்லைப்பகுதிகளை இனி எவ்வித பர்மிட்டும் இல்லாமல் சென்று கண்டுகளிக்க முடியும்' என, லடாக் சுற்றுலா மற்றும் கலாச்சார செயலாளர் மெஹபூப் அலி தெரிவித்தார்.



விஜயபாரதம்

# தலிபான்களின் ரகசியத் திட்டம்



விஜயபாரதம்

அமெரிக்க ராணுவம் விலகிய பிறகு ஆப்கானிஸ்தானை கைப்பற்றினர் தலிபான்கள். பாகிஸ்தான், ஈரான், சீனா உள்ளிட்ட சில நாடுகளைத் தவிர அனேகமாக அனைத்து உலக நாடுகளும் வெளியேறிவிட்டன. ஐ.நாவும் பொருளாதார உதவிகளை நிறுத்தியுள்ளது. இந்நிலையில் பணம் இல்லாமல் அவர்களது நாட்டை எப்படி நிர்வகிப்பார்கள் என்ற கேள்வியும், அவர்களது ஆட்சியை எப்படி உலக நாடுகள் மீண்டும் அகற்றப்போகிறது என்பதும் கேள்விக்குறியாகியுள்ளது.

ஆனால், தலிபான்களின் திட்டங்கள் வேறாக இருப்பதாகவே அவர்களின் நடவடிக்கை உணர்த்துகிறது. உதாரணமாக, ஆப்கன் நாடுதான் உலகின் மிகப்பெரிய போதை மருந்து சப்ளையராக உள்ளது. 85 சதவீத அபின், ஓபியம், ஹெராயின் உள்ளிட்டவை அங்கிருந்துதான் உலக நாடுகளுக்கு வினியோகம் ஆகிறது. 2001க்கும் முன்பு போதைப்பொருள் பயிரிடுவதை எதிர்த்த தலிபான்கள் தற்போது தங்கள் நிலைப்பாட்டை மாற்றி உலக போதைமருந்து வியாபாரத்தை கையில் எடுத்துள்ளனர். இதனால், விலை உயர்ந்த போதை பொருட்கள் மட்டுமல்ல, விலை மலிவான ஹெராயின், மெத்தாம்பேட்டமைன், கிரிஸ்டல் மெத் உள்ளிட்டவையும் இனி உலக நாடுகளில் தாராளமாக புழங்கும். இதன் காரணமாக தலிபான்களிடம் பணமும் புழங்கும். மக்களிடம் போதைப்பொருள் பழக்கவழக்கங்கள் அதிகரிக்கும். எனவே வருங்காலத்தில் இவற்றைத் தடுப்பது உலக நாடுகளுக்கு மிகப்பெரிய சவால்தான்.

# கிருஷ்ண ஜெயந்தி



விஜயபாரதம்

ஹிந்துக்கள் எந்த தெய்வத்தை வணங்கினாலும் சரி, அவர்கள் அனைவருக்கும் பாரபட்சமின்றி பிடித்த கடவுள்களாக உள்ளவர்கள் பகவான் கிருஷ்ணரும் விநாயகரும்தான். அனைத்துக் கடவுள்களுக்கும் கிருஷ்ணருக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. மற்ற அனைவரும் நாம் கேட்கும் வரத்தை அருள்வார்கள். ஆனால், கிருஷ்ணர் நாம் கேட்பதை கொடுக்கமாட்டார். நமக்குத் தேவையானதை தான் கொடுப்பார். ஒரு தாய் எப்படி தன் குழந்தைக்குத் தேவையானதை பார்த்து பார்த்து செய்வாரோ அதேபோல கிருஷ்ணரும் செய்வதால்தான் அவருக்கு 'க்லீம் கிருஷ்ண க்லீம்' என்ற ஒரு மந்திரம் உண்டு. க்லீம் என்பது பெண் தெய்வங்களுக்கான பிரத்தியேக மந்திர சொல். அது ஆண் தெய்வங்களில் கிருஷ்ணருக்கு மட்டுமே தரப்பட்டுள்ளது.

பகவான் கிருஷ்ணர் கோகுலத்தில் வெண்ணை திருடி தின்றார். அப்போது வெண்ணை சிதறி அவர் உடம்பு, கால்களில் விழுந்தது. அதோடு கிருஷ்ணர் நடந்ததால் கிருஷ்ணர் கால் தடம் பதிந்தது. அதை நினைவுப்படுத்தும் விதமாக கிருஷ்ண ஜெயந்தி தினத்தன்று மாவால் கால் சுவடு பதிக்கப்படுகிறது. வரையப்படும் குழந்தைகளின் பாத வடிவ சுவடு எட்டு போன்ற வடிவுடன் மேலே 5 விரல்களுடன் இருக்கும். அதாவது ஓம் நமோ நாராயணா என்ற எட்டு எழுத்து மந்திரமும் நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரமும் ஒருங்கிணைந்து இருப்பதை திருப்பாதம் பிரதிபலிக்கிறது என்றும் கூறுவர்.

புராணத்தில் நாரதமுனிவர் ஒருசமயம் ஒவ்வோரு கிருஷ்ண பக்தர்களின் வீடுகள், பிருந்தாவனம், சிவலோகம் என எங்கு சென்றபோது அனைத்து இடங்களிலும் கண்ணன் இருப்பதைக் கண்டு அதிசயித்தார் என்ற குகுறிப்பு உள்ளது. அதேபோல, எத்தனை கோடி பக்தர்கள் இருந்தாலும், அத்தனை பக்தர்களையும் நான் நேரில் சென்று பார்ப்பேன், காப்பேன் என்பதைக் குறிப்பிடவே ஒவ்வோருவர் வீட்டிலும் கிருஷ்ண ஜெயந்தியன்று கிருஷ்ண திருவடிக் கோலம் போடுகிறார்கள்.

அன்போடும், நட்போடும் ஒருபிடி அவல் கொடுத்ததை ஏற்று நண்பர் குசேலரின் வாழ்க்கையையே மாற்றியவர் பகவான் கிருஷ்ணன். எனவேதான், கிருஷ்ண ஜெயந்தி நாளில் எத்தனையோ பலகாரங்களை படைத்து வழிபட்டாலும் அவல் படைத்து வழிபட நாம் மறப்பதில்லை. இதனையொட்டியே, பலர் கிருஷ்ண ஜெயந்தியான் இந்த நன்நாளில் தங்கமும், பொருட்களும் வாங்குவதை வழக்கமாக வைத்திருக்கின்றனர். அட்சய திருதியை, ஆடிப்பெருக்கு, தனத்திரயோதசி போல கிருஷ்ண ஜெயந்தி நாளில் வாங்குவது பல மடங்காக பெருகும் என்பது ஐதீகம்.

அனைவருக்கும் கிருஷ்ண ஜெயந்தி நல்வாழ்த்துகள்

மைதிலி சீனு